# நாலாயிர திவ்யப் பிரபந்தம் - ஆழ்வார்கள் காட்டும் முக்தி

**ந.ஜெயக்கொடி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
விஷன் பார் விஸ்டம்
ஆழியார்

**முனைவர் எஸ்.பிரசாத்**
நெறியாளர், அரசு கலைக் கல்லூரி
பரமக்குடி

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனுடைய வாழ்வின் அறுதி லட்சியம் இறைவனை அடைவதே. இதை மோட்சம் என்றும் முக்தி என்றும் கூறுகின்றனர். பரம்பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனின் இருப்பிடமான பரமபதம் அல்லது வைகுண்டம் சென்று அங்குள்ள சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையே முக்தி அல்லது மோட்சம் என்று வைணவத்தில் கருதப்படுகிறது. மானிடப் பிறவி மட்டும் தான் இறைவன் மீது பக்தி செலுத்தி மோட்சத்தைப் பெறுவதற்கு ஏற்ற பிறவியாக கருதப்படுகிறது. சாலேக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுஜ்யம் ஆகிய நான்கு வகையான முக்திகளைப் பற்றிய விளக்கங்களை ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் கூறவில்லை. ஆனால் இந்த நான்கு வகை முக்திகளின் தன்மையை ஆழ்வார்கள் அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள். உயிர் உடம்பை விட்டு நீங்காது இருக்கும்போது முக்திநிலையில் அடையக் கூடிய இன்பத்தை அடைந்ததாக ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். அந்த இன்பம் வைகுண்டத்தில் கிடைக்கும் இன்பத்தைவிட அதிகமாக உள்ளது என்கின்றனர் அவர்கள். அவ்வாறு இன்பம் அடையும்நிலையை சீவன்-முக்திநிலை என்கின்றனர். நம்மாழ்வார் பெரிய திருவந்தாதி பாடல் 53லும், தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை பாடல் 2லும், திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தம் பாடல் 108லும் அவ்வாறு பாடியிருக்கிறார்கள். முக்தியை அடைவதற்கு பாவ புண்ணியங்களிலுந்து விடுபட்டு உலகத்தின் மீதுள்ள பற்றைத் துறந்த பின்னரே ஆன்மா மோட்சயின்பத்தை அனுபவிக்க முடியும் என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் கூறுகிறார். பரமபதம் அடைவதற்குத் தடைகளாக உள்ள பாவங்கள் இறைவனைக் கண்டதால் நீங்கப் பெற்றதாக ஆழ்வார்கள் கருதினார்கள். இவ்வாறு பாவங்கள் நீக்கிக் கொண்டதை பெரியாழ்வார் திருமொழி பாடல் 437 மற்றும் 464லும், ஆண்டாள் திருப்பாவை பாடல் 5லும் கூறுகிறார்கள். இறைவனுக்கு அருகாமையில் இருக்கக் கூடிய சாமீப்ய நிலையை குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் கூறுகிறார். அவர் நாரையாக, மீனாக, செண்பகமரமாக அல்லது கோயில் வாசலில் கிடக்கும் படியாக கிடக்க விரும்புவதாகவும் கூறுகிறார். திருமங்கையாழ்வார் திருக்குநற்தாண்டகம் பாடல் 5ல் நன்றாகப் பழுக்கச் காய்ச்சிய இரும்பின் மீது விழும் நீர்த்துளிகள்

எவ்வாறு இரும்பிலேயே ஐக்கியமுற்று காணாமற் போகின்றனவோ அவ்வாறே நானும் இறைவன் மீது பக்தி செலுத்தி அவனில் ஐக்கியமாகும் சாயுஜ்ய முக்திநிலையை அடைய விரும்புவதாகப் பாடுகிறார்.

**முக்கியமான வார்த்தைகள்:** ஆழ்வார்கள், முக்தி, ஜீவன்-முக்தி, சாமீப்யம், சாயுஜ்யம்.

## முன்னுரை

மனிதனுடைய வாழ்வின் அறுதி லட்சியம் இறைவனை அடைவதே. இதை மோட்சம் என்றும் முக்தி என்றும் கூறுகின்றனர். பரம்பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனின் இருப்பிடமான பரமபதம் அல்லது வைகுண்டம் சென்று அங்குள்ள சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையே முக்தி அல்லது மோட்சம் என்று வைணவத்தில் கருதப்படுகிறது.

முக்தியடைவதைப் பற்றி நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் பாடியிருக்கும் பாசுரங்களில் சில இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகிறது.

## முக்திக்கு ஏற்றது மானிடப் பிறவி

மானிடப் பிறவி மட்டும் தான் இறைவன் மீது பக்தி செலுத்தி மோட்சத்தைப் பெறுவதற்கு ஏற்ற பிறவியாக கருதப்படுகிறது. பரம்பொருளான ஸ்ரீமந் நாராயணன் மட்டுமே பரம்பதத்தை அளிக்கக் கூடிய கடவுளாவார் என்று வைணவ சமயம் கூறுகிறது. பகவத்பக்தி மூலமாக மோட்சத்தைப் பெறுவதற்கும் பகவானின் அனுகிரகம் மிகவும் இன்றியமையானதாகக் கருதப்படுகிறது.

“சாலேக்கியம் சாமீப்பியம் சாரூப்பியம் சாயுஜ்யம் ஆகிய நான்கு வகை முக்திகள் ஸ்ரீமத் பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ளன. இந்த நான்கு வகையான முக்திகளைப் பற்றிய விளக்கங்களை ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் கூறவில்லை. ஆனால் இந்த நான்கு வகை முக்திகளின் தன்மையை ஆழ்வார்கள் அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள்.”[1]

## ஜீவன் முக்திநிலை

உயிர் உடம்பை விட்டு நீங்காது இருக்கும்போது முக்திநிலையை அடைந்ததாக ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். அவ்வாறு உயிர் உடம்பை விட்டு நீங்காமல் இருக்கும் போது இறைவனை சரணாகதி அடைவதால் கிடைக்கும் இன்பம் வைகுண்டத்தில் கிடைக்கும் இன்பத்தைவிட அதிகமாக உள்ளது என்கின்றனர் அவர்கள். அவ்வாறு இன்பம் அடையும்நிலையை சீவன்-முக்திநிலை என்கின்றனர்.

சீவன் - முக்தி நிலையில் கிடைக்கம் இன்பம் இறந்த பின் கிடைக்கும் மோட்ச சுகத்தைக் காட்டிலும் மேலானதாக இருப்பதாக நம்மாழ்வார் கூறுகிறார்:

**‘ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது உன்னடியார்க்
கென்செய்வன் என்றே யிருத்தி நீ நின்புகழில்
வைகும்தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு
வைகுந்த மென்றாளும் வான்?’**[2]

ஆழ்வார்கள் இறைவனை உருக்கமாகப் பாடிப் பெரும் பரவத்தில் திளைத்திருப்பதையே பெருமையாகக் கருதுகிறார்கள். எம்பெருமானின் பக்தி வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் அவர்கள் செல்வத்துடன் வாழும் வாழ்க்கையையும் விரும்பவில்லை. மூவுலகுக்கும் மன்னவராவதற்கும் விரும்பவில்லை. மோட்சத்தையடைவதாக இருந்தாலும் அதையும்கூட அடைய நினைக்க மாட்டார்கள். அவர்களுடைய குறிக்கோள் இறைபக்தியில் திளைத்து இன்பம் பெறுவதேயாகும்.

இறைவனின் திருநாமத்தின் பெருமை இந்திரலோகமாளும் இன்பத்தைக் காட்டிலும் பெரியது என்று தொண்டரடிப்பொடியாழ்வார் கீழ் வருமாறு தமது பாசுரம் ஒன்றில் கூறுகிறார்.

**‘பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய் இந்திரலோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே’**[3]

நான் தெய்வலோகத்தையும் சிவலோகத்தையும் இந்திரலோகத்தையும் அடைய விரும்பவல்லை. உன்னைக் கூடவேண்டும் என்ற ஆசையைத் தவிர வேறு எந்த மோட்ச சுகத்தையும் விரும்பவல்லை என்று திருமழிசையாழ்வார் கீழ்கண்ட பாசுரத்தில் கூறியுள்ளார்.

**'கேடு இல் சீர் வரத்தனாய்க் கெடும் வரத்து அயன் அரன்**
**நாடினோடு நாட்டம் ஆயிரத்தன் நாடு நண்ணினும்**
**வீடது ஆன போகம் எய்தி வீற்றிருந்த போதிலும்**
**கூடும் ஆசை அல்லத ஒன்று கொள்வனோ குறிப்பிலே?'[4]**

### மோட்சயின்பம் அடையும் வழி

மோட்சத்தை அல்லது முக்தியை அடைவது எப்படி? என்றும் ஆழ்வார்கள் சிந்தித்திருக்கிறார்கள். பிறவிக்குக் காரணமாயுள்ள பாவ புண்ணியங்களிலிருந்து ஆன்மா விடுபட வேண்டும் .உலகம் வேறு ஆன்மா வேறு என்று அறிந்து உலகத்தின் மீதுள்ள பற்றைத் துறந்த பின்னரே ஆன்மா மோட்சயின்பத்தை அனுபவிக்க முடியும் என்று நம்மாழ்வார் கூறுகிறார்.

**'நன்றாய் ஞானம் கடந்து போய் நல் இந்திரியம் எல்லாம் ஈர்த்து**
**ஒன்றாய்க்கிடந்த அரும்பெரும்பாழ் உலப்புஇல்-அதனைஉணர்ந்து உணர்ந்து**
**சென்று அங்கு இன்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசை அற்றால்**
**அன்றே அப்போதே வீடு அதுவே வீடு – வீடாமே'[5]**

அந்தர்யாமியாய் உணர்ந்த இறைவனைக் கணப்போதும் பிரிய இயலாத நிலையும் ஆழ்வாருக்கு ஏற்படுகின்றது. அதன் பயனாய் அவனைப் போகவிடாது தன்னுள் இருத்துகின்றார்.

**'புக்கினிற் புக்குன்னைக் கண்டுகொண்**
**டேனினிப் போக விடுவதுண்டே'[6]**

என இறைவனை விடாத நிலையைப் பாடுகின்றார். இவற்றால் பெரியாழ்வாரின் அருளனுபவம் தன்னுள் இறைவனை நிறுத்திய சீவனின் செயலாக அமைகின்றது.

உலகுக்கு ஆதியான பெருமானை அன்போடு வழிபட்டு விரைவில் வைகுண்டத்தை அடையவே ஆழ்வார்கள் விரும்புகிறார்கள். அப்படி வைகுண்டத்தையடைய இடையூறாயிருக்கின்ற தமது உடலை நோயாகக் கருதுகிறார் திருமழிசையாழ்வார். அவர் வைகுண்டத்தை விரைவில் காண விரும்பும் தனது விருப்பத்தை கீழ்கண்ட பாசுர வரிகளில் அழகுற எடுத்துரைக்கிறார்.

**'ஆய்ந்து கொண்டாதிப் பெருமானை அன்பினால்**
**வாய்ந்த மனத்திருத்த வல்லார்கள் - ஏய்ந்த தம்**
**மெய்குந்தமாக விரும்புவரே தாமும் தம்**
**வைகுந்தம் காண்பார் விரைந்து'[7]**

### இறைவனைப் பற்றி நிற்கும் ஆன்மாவின் நிலை

திருத்தொண்டு மட்டுமே பரமபதத்தை சீவான்மாவுக்கு அளிக்க வல்லது. இத்திருத்தொண்டினைச் செய்யும்போதே மனிதன் இறைவனையும் அனுபவிக்கின்றான். இறைவன் ஒருவனையே பற்றி நிற்கும் ஆன்மா அடையும் சிறப்பினை பெரியாழ்வார்

**'நாம மென்று நவின்றுரைப் பார்கள்**
**நண்ணு வாரொல்லை நாரண னுலகே'[8]**

என்றும்

**'ஆயரேற்றை அமரர்கோவை அந்தணர்த தமமுதத்தினை**
**சாயைபோலப் பாடவல்லார் தாமு மணுக்கர்களே'[9]**

என்று உரைக்கின்றார். இதனால் சீவான்மா பெறுகின்ற பலன் அறியப்படுகிறது.

### பாவங்கள் நீங்கப் பெற்ற நிலை

பரமபதம் அடைவதற்குத் தடைகளாக உள்ள பாவங்கள் இறைவனைக் கண்டதால் நீங்கப் பெற்றதாக ஆழ்வார்கள் கருதினார்கள். செய்யத் தகாதன செய்தலும், செய்யத் தகவனவற்றைச் செய்யாமலிருத்தலுமாகிய இருவகைக் குற்றங்களை மனிதன் செய்யும் பாவங்களாகும். இறைவனாய்க்

காண்பதால் அப்பாவங்கள் நீங்குகின்றன. திருமால் தன்னை ஏற்றுக் கொண்ட பின் தன் பிறவித் துன்பமான கடல் வற்றிப் பேரின்பப் பெரும்பதம் பெற்றதனை

**'பறவையேறு பரமபுருடா நீயென்னைக் கைக்கொண்டபின்**
**பிறவியென்னும் கடலும்வற்றிப் பெரும்பத மாகின்றதால்**
**இறவுசெய்யும் பாவக்காடு தீக்கொளிஇ வேகின்றதால்**
**அறிவையென்னு மமுதஆறு தலைப்பற்றி வாய்க்கொண்டதே'[10]**

என்ற பாசுர வரிகளில் பெரியாழ்வார் நயம்பட எடுததியம்புகிறார். எம்பெருமானுக்குத் தாம் ஆட்பட்டுத் தமக்குக் கிடைத்த நன்மைகளையும் தம்முடைய பாபங்கள் ஒழிந்து அமுதப் கடலில் திளைத்ததையும் நினைந்து பேரின்பமடைகிறார் ஆழ்வார். தீயினில் இட்ட தூசி எவ்வாறு காணாமல் போகுமோ அவ்வாறு இறைவனைப் பாடி மனத்தினால் தியானிக்க பழவினைகளும் புகுவினைகளும் காணாமல் போய்விடும், பேரின்பமும் அனைவருக்கும் கிடைக்கும் என்பதனை

**'தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது**
**வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்**
**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்'[11]**

என்று ஆண்டாளும் தம் திருப்பாவையில் பாடுகிறார்.

## சாமீப்ய முக்திநிலை

கீழ்கண்ட பாசுரத்தில் குலசேகராழ்வார் சாமீப்ய (இறைவனுக்கருகாமையில் இருப்பது) முக்தி பெறவேண்டும் என்ற தமது அவாவை வெளிப்படுத்தியிருக்கிறார்.

**'ஊனேறு செல்வத்து உடல் பிறவி யான் வேண்டேன்**
**ஆனேறேழ் வென்றான் அடிமைத் திறமல்லாமல்**
**கூனேறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்து**
**கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே'[12]**

நாளுக்கு நாள் உடலில் சதையை அதிகரிக்கச் செய்யும் செல்வத்தையுடைய மானிடனாக பிறக்க நான் விரும்பவில்லை. நப்பின்னைக்காக ஏழு எருதுகளை வென்றவனான எம்பெருமானுக்கு தொண்டு செய்வதையே நான் விரும்புகிறேன். பாஞ்சசன்னியம் என்னும் சங்கினை இடக்கையில் ஏந்தியிருக்கும் எம் பெருமானின் திருவேங்கடமலை மீதுள்ள கோனேரி என்னும் அழகிய திருக்குளத்தில் வாழும் நாரையாக நான் பிறக்க விரும்புகிறேன் என்ற தனது அவாவினை மேற்கண்ட பாசுரத்தில் குலசேகராழ்வார் தெரிவிக்கிறார்.

அவரே மற்றொரு பாசுரத்தில் கோயில் வாசலில் கிடக்கும் ஒரு படியாக இருக்க விரும்புவதாகவும், அப்படிக் கிடப்பதால் இறைவனின் பவள வாயை பார்த்துக் கொண்டேயிருக்கும் பேறு தனக்குக் கிடைக்க விரும்பவதாகவும் கூறுகிறார். அந்தப் பாசுரம் இதுதான்

**'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே**
**நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்**
**அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்**
**படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'[13]**

எல்லா திருமால் கோவில்களிலும் சந்நிதியின் முன் கிடக்கும் படியைக் குலசேகரர் படி என்று இன்றும் வழங்கப்படுவதை நாம் காணலாம்.

அவர் நான்காம் திருமொழி முழுவதிலும் நாரையாக, மீனாக, அந்தரங்க அடிமையாக, செண்பகமரமாக, புதராக, காட்டாறாக, போகின்ற வழித்தடமாக, அல்லது ஏதேனும் ஒரு பொருளாகக்கூட பிறக்கக் கடவேன் என்பதாகப் பாடுகிறார்.

## சாயுஜ்ய முக்தி நிலை

இறைவனுடன் எவ்வாறு ஒன்றறக் கலக்க வேண்டுமென்பதை திருமங்கையாழ்வார் அழகான உவமை மூலம் கீழ்கண்டவாறு விளக்கிக் கூறுகிறார்.

**'இரும்பனன்றுண்ட நீர்போல் எமபெருமானுக்கு என்தன்**
**அரும் பெறலன்பு புக்கிட்டு அடிமை பூண்டு உய்ந்து போனேன்'[14]**

நன்றாகப் பழுக்கச் காய்ச்சிய இரும்பின் மீது விழும் நீர்த்துளிகள் எவ்வாறு இரும்பிலேயே ஐக்கியமுற்று காணாமற் போகின்றனவோ அவ்வாறே நானும் இறைவன் மீது பக்தி செலுத்தி அவனில் ஐக்கியமாக விரும்புகிறேன். இறைவனோடு ஐக்கியமாகும் இந்தநிலையைத்தான் சாயுஜ்ய முக்தி என்பர். அதை அடைய வேண்டும் என்ற தம்முடைய விருப்பத்தை திருமங்கையாழ்வார் தமது இந்த பாசுரத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

**நிறைவுரை**

உடலைத் துறந்த உயிர் அடையும் முக்தி எவ்வாறு இன்பமானதாக இருக்குமோ அதே இன்பத்தை இறைவனை நினைப்பதால் உயிர் உடலோடு இருக்கும் போதே கிடைத்து விடுகிறது என ஆழ்வார்கள் கருதுகிறார்கள். ஆழ்வார்கள் இவ்வாறு பக்தி வாழ்க்கை வாழும் போது இவ்வுலகிலும் மோட்சயின்பம் அனுபவிக்கின்றனர், உயிர் பிரிந்த பின்னும் அதை அடையும் என்பது இதனால் விளங்குகிறது.
வீடுபேறு அடைவதற்கான உபாயங்களைக் கடைப்பிடித்து எம்பெருமானின் திருவருளைப் பெற்ற பக்தர்கள் மட்டும் பரமபதத்தை அடைய முடியும். பிறப்பு இறப்பு என்னும் சக்கரத்திலிருந்து விடுதலை பெற்று பரமபதம் சென்ற ஆன்மா மீண்டும் பூவுலகில் பிறப்பதில்லை. எனவே பரமபத உலகை மீளா உலகு என்று கூறுகிறார்கள். பிரளய காலத்திலும் இவர்களுக்கு அழிவு ஏற்படுவதில்லை. பரமபதம் அடைந்த ஆன்மா அனைத்து வித துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று பேரானந்தத்ததை அனுபவிக்கிறது.

**துணைநூற் பட்டியல்**

1. ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும் டாக்டர் கே.ஆர்.விட்டல்தாஸ் பழனியப்பா பிரதர்ஸ் சென்னை 2012 பக்கம் 153
2. நாலாயிரம் 2637 பெரிய திருவந்தாதி-பாடல் 53, நம்மாழ்வார்
3. நாலாயிரம் 873 திருமாலை-பாடல 2, தொண்டரடிப்பொடியாழ்வார்
4. நாலாயிரம் 859 திருச்சந்த விருத்தம்-பாடல் 108, திருமழிசையாழ்வார்
5. நாலாயிரம் 3529 திருவாய்மொழி-8-8-6, நம்மாழ்வார்
6. நாலாயிரம் 453 பெரியாழ்வார் திருமொழி-5-3-1, பெரியாழ்வார்
7. நாலாயிரம் 2460 நான்முகன் திருவந்தாதி-பாடல் 79, திருமழிசையாழ்வார்
8. நாலாயிரம் 442 பெரியாழ்வார் திருமொழி-5-1-10, பெரியாழ்வார்
9. நாலாயிரம் 473 பெரியாழ்வார் திருமொழி-5-4-11, பெரியாழ்வார்
10. நாலாயிரம் 464 பெரியாழ்வார் திருமொழி-5-4-2, பெரியாழ்வார்
11. நாலாயிரம் 478 திருப்பாவை-5ஆம் பாசுரம், ஆண்டாள்
12. நாலாயிரம் 677 பெருமாள் திருமொழி-4-1, குலசேகராழ்வார்
13. நாலாயிரம் 685 பெருமாள் திருமொழி-4-9, குலசேகராழ்வார்
14. நாலாயிரம் 2036 திருக்குறுந்தாண்டகம்-பாடல் 5,திருமங்கையாழ்வார்